# கீதாரி, நாவல் சுட்டிக்காட்டும் இடையர் இன மக்கள் வாழ்வும், சங்க திணைசார் வாழ்வியலும் - ஓர் ஒப்பாய்வு

ஆய்வாளர்
**ஆய்வாளர் சே.நிர்மலா**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்
nirmala.s2022@vitstudent.ac.in

நெறியாளர்
**முனைவர் அ.மரிய செபஸ்தியான்**
உதவிப்பேராசியர், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி, வி.ஐ.டி பல்கலைக்கழகம், வேலூர்.
mariasebastin.a@vit.ac.in

DOI:- 10.5281/Arimaa.15130887

**ஆய்வுசுருக்கம்**

குறிஞ்சி திணை வாழ்வியலானது வேட்டை சமூகத்தை மையமிட்டுள்ளது போல முல்லைத் திணையானது கால்நடை சமூகத்தை மையமிட்ட ஒன்றாகத் திகழ்கின்றது. கால்நடை சமூகத்தில் நடைமுறை வாழ்க்கையை சங்க காலம் தொட்டே இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டு வந்திருப்பதை அறியமுடிகிறது. இடையர் மக்கள் ஒரு முக்கியமான சமூகக் குழுவாக இருப்பின் அவற்றின் நாடோடி வாழ்க்கையில் ஆட்டிடையர்கள் பற்றிய கருத்துகள் “கீதாரி” நாவலில் (**சு.தமிழ்ச்செல்வி**) எடுத்துரைக்கின்றார். இடையர் சமூகம் ஒரு பாரம்பரியமான வாழ்வியல் முறையில் இயற்கையை சார்ந்த வாழ்க்கை முறையிலும் மேய்ச்சல் தொழிலில் ஈடுப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. ஆனால், தற்கால சூழலில் இடையர் சமூக வாழ்க்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இது இயற்கை வாழ்வியல் தாக்கத்திற்குள் ஒரு மாற்றத்தைக் குறிக்கிறது. இடையர் சமூகத்தின் பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகள் தொடர்ச்சியாக மாற்றமடைந்தாலும், சில பகுதிகளில் அவை நீடிக்கின்றன. குறிப்பாக, இடையர் சமூகத்தினர் மரபுகளை முழுமையாக கடந்துச் செல்லவில்லை என்பதை அறிந்து அவற்றின் மரபின் நீட்சி இன்றும் மாற்றம் ஏற்படுகிறதா? என்பதை குறித்து ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறள் சொற்கள்**

சங்க இலக்கியம், இடையர், ஆடுமாடு மேய்த்தல், கிதாரி நாவல், தொழில்கள், உணவுமுறைகள், பழக்க வழக்கங்கள், திருமணம், செயல்பாடுகள்.

## முன்னுரை

மனித சமூகம் பலவேறு இனக்குழுக்களின் பண்பாடுகளை உள்ளடக்கியதாக விளங்குகிறது. தமிழர்களின் வாழ்க்கை நடைமுறைகளும் சமூக அமைப்புகளுக்கும் காலப்போக்கில் பல்வேறு மாற்றங்களை எதிர்கொள்கின்றனர். சங்க காலத்திலிருந்து தமிழரின் வாழ்வியலை திணைகள் மூலம் விரிவாக்கும் இலக்கியங்கள், சமூக அமைப்புகளின் தனித்துவத்தையும் வாழ்க்கை முறைகளையும் வெளிப்படுத்துகின்றன. சங்க கால இலக்கியங்கள் தொடங்கி, தற்காலத்தில் கீதாரி நாவலில் (சு.தமிழ்ச்செல்வி)

இடம்பெறும் இடையர்களின் வாழ்க்கை முறைகள் எப்படி மாற்றமடைந்துள்ளன என்பத்தைப் புரிந்துக்கொள்வது அவசியமாகிறது. இன்றைய சமூக மாற்றங்கள் மற்றும் பருவ மாற்றங்கள் காரணமாக இடையர் சமூகத்தில் ஏற்பட்டுள்ள வாழ்வியல் மாற்றங்களை இந்த ஆய்வு பிரதிபலிக்கின்றது. பழமையான மரபுகள் தொடச்சியாக நிலைத்திருக்கிறதா அல்லது அவை இன்றைய சமூகத்தில் எந்தளவிற்கு மாற்றத்தை உருவாகியுள்ளன என்பதை பற்றி ஆய்வு மேற்கொள்ள இக்கட்டுரை அமைகிறது.

**இடையர்**

முல்லை நிலவாழ் இனக்குழுவினர் இடையர் என்பட்டனர். காடுகளை இருப்பிடமாக கொண்டு இருந்தமையை அகநானூற்று பாடலின் (அகம் பா-394) காடு உறை இடையன் என்ற வரியிலும், இடையர்கள் ஆடுமாடுகளை காடுகளில் மேய்த்தல் பற்றிய குறிப்பு புறநானூறு பாடலின் (புறம் பா-230) மூலம் காணமுடிகின்றது. “சங்க இலக்கியம் எனச் சுட்டபெறினும் அந்நூல்கள் ஒரே காலக்கட்டத்தில் எழுதப்பெற்ற நூல்கள் அன்று. (**அ.செல்வராசு**)” இடையர் இனத்து மக்கள் தலைவர்களாக வைத்துப் பாடப்பெற்றுள்ளதை கலித்தொகை பாடலின் மூலமும், கலித்தொகை தவிர்த்த பிற முல்லைத்திணைப் பாடல்கள் அனைத்திலும் ஆடுமாடு மேய்க்கும் இடையர்கள் தலைவர்களாக வைக்கப்பெறவில்லை **(பீ.பெரியசாமி)** குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். “கிடை என்பது கால்நடைக் கூட்டம் என்னும் பொருளுக்குரியவர் கிடையர் என்று அழைக்கப்பெற்று இடையர் என்று மாறியதுடன் முல்லை நிலத்தில் வாழ்ந்தவர்களே இடையர்களவார்கள்”. (**பேரா.சி.பாக்கிய செல்வரதி**) இவ்வாறு கால்நடை மேய்ப்பவர்கள் கால மாற்றத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைவதை அறியமுடிகிறது.

**இடையர் பெயர்க்காரணம்**

முல்லை நில வாழ் இனக்குழுவினர் ‘இடையர்கள்’ எனப்பட்டனர். சங்க இலக்கியத்தில் முழுவதிலும் கால்நடை மேய்ப்போரைக் குறிக்கும் சொற்களாக அண்டர், ஆயர், இடையர், கோவலர், பொதுவர், தொறுவர் போன்ற சொற்கள் பன்முறை பயின்று வந்துள்ளதைக் காணமுடிகிறது.(**பீ. பெரியசாமி**)

**“ஆயர் வேட்டுவர் ஆடுஉத் திணைப்பெயர்**
**ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே”**

**(தொல். அகத்திணை நூ.23)**

மேற்கூறிய தொல்காப்பிய உரையின் மூலம் ஆயர் என்பவரே இடையர் என்பது திண்ணமாயிற்று, சங்க இலக்கியங்கள் வழியாக அறியப்படும் முல்லைநில மக்களின் வாழ்வியலானது மேய்ச்சல் தொழில், தோட்ட வேளாண்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ‘சுயச்சார்பு பொருளாதார’ உறவுடன் அமைந்திருக்கிறது. செல்வம் நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் தலையாயவராய் உள்ளவர்க்கும் நாள்தோறும் உழைத்து வயிறு வளர்க்கும் கடையருக்கும் இடைப்பட்டவரே இடையர் என்று **மா. துரை அரங்கசாமி** குறிப்பிடப்படுவதையும் மற்றும் குறிஞ்சி நிலத்துக்கும் மருத நிலத்துக்கும் இடைப்பட்ட முல்லை நிலத்தில் வாழ்ந்தவர் இடையர் ஆவர் என்று **சக்திசான் சுப்பிரமணியன்** போன்றோர் கூறிப்பிட்டுள்ளார். மேலும்,

**“முல்லையர், கோவலர், இடையர்**
**(சொல்லிய) வண்டர், தொறுவர், கோவிந்தர்**
**அண்டர், கோபலர், ஆயர், அமுதர் என்று**
**இங்கு இவை முல்லை நிலத்துவர் பெயரே”**
**(திவாகார நிகண்டு, ப.16)**

கால்நடை மேய்ப்போரைக் குறிக்கும் பெயர்களாக திவாகாரம் நிகண்டு சூட்டினாலும் கூட பிற்காலத்தில் இவர்கள் அம்பலக்காரர், மந்தடி, மந்தரி, முக்குந்தர், ரெட்டி, அண்டர், ஆவியர், குறும்பர், பூமியர், வேளிர் என்று பட்டப்பெயர்களோடு அழைக்கப்பெறுகின்றனர் என்பர் (**வில்லிபுரம் மகேஸ்வரன்**) சங்க இலக்கிய நூலான ‘முல்லைக்கலி’யில் இடம்பெறும் பாத்திரங்கள் (Character) ஆயர்குடியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இவர்களில் எருமைகளை வளர்ப்பவர்கள் ‘கோட்டினத்தார்’, பசுவை வளர்ப்பவர்கள் ‘கோவினத்தார்’, ஆடுகளை வளர்ப்பவர்கள் ‘ஆட்டினத்தார்’ அல்லது புல்லித்தார் என மூன்று வகையான ஆயர் இனக்குழுக்களை கலித்தொகை (கலித் பா-103,33-37-47) பாடலின் மூலம் காணமுடிகிறது. இடையர்கள் நிலத்தோடும், கால்நடைகளோடும் பின்னிப்பிணைந்திருக்கும் வாழ்வியலை புலப்படுத்துவதோடு, ஆயர்குடியின் தனித்துவத்தையும் உணர்த்துகின்றனர். (**பெ.கபிலர்**) சமுக பொருளாதார நிலைமைகளின் காரணமாகவே இடையர்களின் பெயர்கள் மாற்றம் அடைந்துள்ளதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் இடையர் இனக்குழுவினர் காலப்போக்கில் பல பரிணாம வளர்ச்சியை அனுபவத்து பல்வேறு புதிய அடையாளங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பது புலனாகிறது.

**வேறுப்பெயர்கள்**

இடையர்களை கோவலர்கள் என்று நெடுநல்வாடையில் **(நெடு,பா-5)** காணமுடிகின்றது. அம்பலகாரர், கரையாளர், கீதாரி, கோன் அல்லது கோனார், சேர்வைதாஸ், நம்பி, நாயுடு, பிள்ளை, மணியக்காரர், மந்தரி அல்லது மந்தடி, மன்றாடியர், யாதவர், ரெட்டி, இடையர் போன்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றனர். இவர்களை கோத்தாரிய அடிப்படையில் கல்கட்டி இடையர், நார்கட்டி இடையர், பால்கட்டி இடையர், பஞ்சாரம்கட்டி, சிவியர் சோழியாடு, சாம்பார் இராமக்காரர், பூச்சுக்காரர், கொக்கிக்கட்டி என்று வகைப்படுத்துவதை **(பேரா.சி.பாக்கிய செல்வரதி)** அறியலாம்.

**நாடோடி வாழ்க்கை**

இடையர்கள் புலம் பெயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தமையை சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளதை நெடுநல்வாடையில் காணலாம்.

**“பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென**
**ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்**
**புலம்பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்**
**நீடிதழ்க் கண்ணி நீரலைக் கலாவ**
**மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்” (நெடு.5)**

இப்பாடல் வரியில் கோவலர்கள் தம் ஆனிரைகளை வேறு நிலப்பரப்பில் மேயவிட்டுக்கொண்டு புலம்புகின்றதையும் மற்றும் பருவமாற்றத்தினால் வாடைக்காற்று வீசுவதால் நடுங்குகின்றனர் என்பதையும் உணரமுடிகின்றது. இதனால் அவர்கள் மேய்ச்சலுக்காக புலம் பெயர்ந்தமையை அறியமுடிகிறது. மேலும் , இடையர்கள் பிரிவினர்களின் ஒருவரான புல்லினத்தவர் காலப்போக்கில் தங்களை தற்காலத்திற்கேற்ப தகவமைக்கொண்ட இடையர்களின் நாடோடி வாழ்க்கையை பற்றியும் ஆட்டிடையர்களின் வாழ்விலை இயல்பாகப் பதிவுசெய்துள்ளதை கீதாரி நாவல் மூலம் அறிந்துகொள்ளலாம்.

**"ஊர்களின் வயல்காடுகளிலும் கோட்டங்களிலும் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் இவர்கள் மழைக்காலத்துக்கு மட்டும் மன்னாரத்திற்கு வந்துவிடுவார்கள்.ஆடி மாதத்தில் ஆற்றில் தண்ணீர் வந்துவிட்டாலே ஆடுமேய்க்கும் கீதாரிகளுக்கு ஊர்களில் ஆடு மேய்க்க முடியாமல் போய்விடும். வழக்கமாய் ஆடுகள் மேயும் வயல்காடு கொட்டகமெங்கும் நடவு நட்டுவிடுவார்கள். ஆடுகளை மேய்க்கவும் பட்டி போடவும் இடமில்லாமு போய்விடும் (கீதாரி, ப.30), ஊர் ஊராய் ஆட்டோடு திரிந்து பிழைப்பு நடத்தும் கீதாரி கூட்டத்தினர்" (கீதாரி, ப.40)** இந்நாவலின் மூலம் இடையர்கள் தங்களுக்கென்று இருப்பிடம் இருந்தாலும் அவர்கள் வாழ்க்கை சூழ்நிலைக்காகவும், உறவுகளுக்காகவும், தொழிலுக்காகவும் நாடோடியாக புலம்பெயர்ந்துச் சென்றுள்ளதை அறியமுடிகிறது.

**உணவுமுறைகள்**

தமிழர் வாழ்வியலை நில அடிப்படையில் பிரித்து திணைச்சார் உயிரினங்களின் உணவு தொடர்பான வழக்காறுகளை கொண்டுள்ளன. அதில் "குறிஞ்சி தோன்றிய புன்புல விவசாயம் முல்லை ஊடாக மருதம் வரை சென்று நீர்ப்பாசன விவசாயமாகச் செழித்தது. ஒரு திணையில் தோன்றிய தகவமைப்பு மற்ற திணைகளுக்கும் சென்று மறையாமல் தன்னைத் தக்க வைத்துக் கொண்டது" என **(பக்தவத்சல பாரதி)** சுட்டிக்காட்டுவதன் வழியாக உணரலாம்.

**"பாலொடு வந்து கூழொடு பெயரும்**
**யாடுடை இடைமகன் சென்னி" (குறு,பா-221)**

இப்பாடல் வரியில் இடையர்கள் சோற்றில் பால் ஊற்றி சப்பிடுவது அறியமுடிகின்றது. மேலும், அவரை விதையின் பருப்பும், வரகரிசிச் சோற்றையும் கலந்து உண்டனர் என்பதை பெரும்பாணாற்றுப்படை பாடலில் **(167-168), (192-197)** காணமுடிகிறது. மலைபடுகடாமில் முல்லை நிலத்தில் பாலும், பால்சோறும் மிகுதியாக உண்டு, மூங்கில் அரிசியுடன் அவரை விதை மற்றும் புளியுடன் கலந்து கூழாகச் சமைத்து உண்டனர். இறைச்சி கலந்த நெய்சோற்றையும் முல்லை நில மக்கள் உண்டனர் என்பதை **"பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவீர்" (மலை, பா-147)** என்ற வகைகள் மூலம் அறியமுடிகிறது. இதனை தொடர்ந்து கீதாரி நாவலில் இடையர்களின் உணவுமுறை ஊர் ஊராக அலைந்து திரிந்து வாழ்க்கை நடத்தும் இவர்கள் தினமும் சோறுதான் உண்டனர். இதனை **"இரவு சுடு சோறு உப்புக்கண்டம் போட்டு வைத்த குழம்பு, காலையில் பழையசோறு அல்லது தெளிவு தண்ணீர் மட்டும் தான் பின்பற்றி வருகின்றனர். மழைக்காலம், வெயில் காலம், பனிக்காலம் என்ற அனைத்து பருவங்களிலும் இது தான் இவர்களின் உணவுமுறையாக இருந்துவருகிறது". (கீதாரி, பக்-**

**13) ஆடுகள் இறந்து விட்டால் ஆட்டு இறைச்சியை பாறைகளில் உப்பு சேர்த்து காயவைத்துக் கொள்வது இவர்களின் வழக்கமாக உள்ளது".(கீதாரி, பக்-155)** இதன் மூலம் இடையர்களின் உணவுமுறையானது அவர்களின் சூழலுக்கேற்றவாறு மற்றமடையாமல் இருப்பதைக் காணமுடிகிறது.

**இடையர் உருவமும் வாழ்க்கைமுறையும்**

இடையர் உறியோடு தீக்கடைக்கோலைக் பாதுகாப்பாக வைத்திருப்பதற்குத் தோலாலான பையை வைத்திருந்துள்ளனர். கால்நடைகளின் மூலம் கிடைக்கும் பொருள்களை விற்பனை செய்துள்ளதை நற்றிணை பாடலின் மூலம் அறியலாம்.

**"ஞெலி கோல் கலப்பை அதளொடு சுருக்கி**
**பறிப் புறத்து இட்ட பால் நொடை இடையன்"**
**(நற்றிணை பா.142)**

இப்பாடலில் கையில் கொண்ட பலவாகிய காலிட்டுப் பின்னிய மெல்லிய உறியுடனே தீக்கடைக்கோல் முதலாய கருவிகளை இட்டு வைத்த தோற் பையை ஒருசேரச் சுருக்கிக்கட்டி பனையோலைப் பாயோடு முதுகிற் கட்டியிட்ட பால் விலை கூறி ஏகும் இடையன் உருவத்தை அறிவதோடு அவர்கள் பால் விற்றலையும் அறியமுடிகிறது. இதனை **கீதாரி** நாவலில் இடையர்கள் கிடைக்கூலியானது பணமாகவோ, தானியமாகவோ, புழுக்கையாகவோ கிடைக்கும். தானியத்தை உணவிற்கு வைத்து கொண்டு ஆட்டுகளின் புழுக்கையை விற்று பணமாக்கிக் கொள்வது (**கீதாரி-பக்:35, 153**) சங்க காலத்தில் இடம் பெறாத பொருள்சார் மாற்றத்தை தற்காலச்சூழல் ஏற்படுத்தியுள்ளதை காணமுடிகின்றது.

மேலும், ஆடுகளை பாலை நிலப் பகுதியில் மேய்த்துள்ளனர் என்பதை நற்றிணை பாடல் மூலம் அறியலாம்.

**"பரற் தலைபோகிய சீரற் தலைக் கிள்ளி**
**மீமிசைக் கலித்த வீ நறு முல்லை**
**ஆடு தலைத் துருவின் தோடு தலைப்பெயர்க்கும்**
**வன் கை இடையன் எல்லிப் பரீஇ"**
**(நற்றிணை பா.169)**

பரல் மிக்க பாலை நிலத்தின்கண் வளர்ந்தொங்கிய சிச்சிலிப் பறவைபோன்ற தலையையுடைய கள்ளியின் மேலே படர்ந்த தழைந்த முல்லையின் நறுமலரை ஆகின்ற தலையையுடைய யாட்டின் தொகுதியை மேய்க்கச் செலுத்துகின்ற வலிய கையையுடைய இடையன் என்று இடையனின் வலிமைமிக்கவர்களாகவும் அழகுடன் இருந்தமையை தெளிவுப்படுத்துகிறது. கார்காலத்து நள்ளிரவில் தாம்புக் கயிற்றினைக் கொண்ட உறியினையும் பானையையும் கொண்டுக் கோலினைத் தன் காலுடன் சேர்த்துத் தனியே செம்மறி ஆட்டின் காவலுக்கு நிற்கிறான். தீக்கடைக் கோலினால் தீ ஏற்படுத்தி, வாயை மடித்துச் சீழ்க்கை ஒலியை எழுப்புகின்றான். அவ்வொலிக்குப் பயந்து ஆட்டுக்குட்டியைப் பிடிக்க வந்த குள்ளநரி ஓடியதை அகநானுறு பாடலில் காட்சிப்படுத்துகின்றது.

**"நுண்பல் துவலை ஒரு திறம் நனைப்ப**
**தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்"**
**(அகம். 274:7-8)**

செம்மறியாடும் வெள்ளாடும் ஆட்டிடையர்களால் வளர்க்கப்பட்டன. ஆட்டினங்களை மேய்புலத்திற்கு ஓட்டிச் சென்று மேயச் செய்வர். ஆடுமாடுகளைக் ஓட்டும் காலத்தில்

சீழ்க்கையொலி அடித்ததால் இவர்கள் வாய்மடிந்து காணப்பட்டது அதனால் இவரை “மடிவாய் கோவலர்” என்றும் “மடிவாய் இடையன்” என்று அழைப்பர் **(க.கவிதா 2024)** ஆடுகள் சிதறிவிடாமல் இருப்பதற்கும் பிறரது ஆட்டுத் தொகுதியுடன் கலந்துவிடாமல் இருப்பதற்கும் ‘வீளை’ என்னும் ஒலியை வாயைக் குவித்து எழுப்புவர். தன் ஆடுகளை ஒரே இடத்தில் கூட்டுவதற்காகவும் வாயை மடித்து சீழ்க்கையொலி எழுப்புவர்

**“காடு உறை இடையன் யாடு தலைப்பெயர்க்கும்**
**மடி விடு வீளை வெரீஇ, குறு முயல்”**

**(அகம்.394:13-14)**

கையில் தீக்கோல் முதலிய கருவிகளைத் தோற்பையில் இட்டு, ஒருபுறம் தூக்கிக்கொண்டும் ஆட்டிடையன் செல்வார். கார்காலத்தில் மிகுதியான வெள்ளம் காரணமாகத் தம் ஆட்டினங்களை மேட்டு நிலத்திற்கு ஒட்டிச் செல்வான். **(நெடுதல்.5)** **“கடலுக்கும் ஒடவுக்கும் இடையில் நீண்ட மேட்டு நிலமாக இருக்கும் மன்னாரத்தில் தான் ஆடுகளை மேய்த்துக்கொண்டு இவர்கள் தங்கியிருக்கின்றார்கள். (கீதாரி, ப-30)** தொடர்ச்சியாக பெய்யும் மழையில் நனைந்திருப்பார். **(நற்.142:15)** ஆட்டினங்களை மேய்க்கச் செல்லும் முன் குட்டிகளைத் தனியே பிரித்து குடை போன்ற கூண்டுகளில் அடைப்பர். இவற்றிற்குத் தழைக்குலைகளைக் கட்டையான கால்களில் கட்டிவிடுவார்; அவற்றை ஆட்டுக்குட்டிகள் உண்ணும். ஆடுகளின் எரு குப்பையாகக் குடிலைச் சுற்றிக் காணப்படும் **(பெரும்.154)** என்று பல்வேறு சங்க இலக்கியப் பாடல்கள் பதிவுசெய்துள்ளன. அதுப்போன்று “**ஆடு நின்ற இடமெல்லாம் மழை நாட்களில் காயாத தரையில் கிடைக்கும் ஈரப் புழுக்கையை கூட்டி குவிப்பது சிரம்மாக இருக்குமென்பதால் சற்று நேரம் தரையும் புழுக்கையும் உலரட்டுமென்று போட்டு வைத்துவிடுவார்கள்” (கீதாரி.ப-161)** ஆடு குடியில் மழை நாட்களில் இடையர்களுக்கு ஏற்படும் துன்பத்தை அறிந்துகொள்ளமுடிகிறது. மேலும், ஆடு புக்கையைக் கொண்டு இடையர்கள் வாழ்க்கையை மாற்றியமைக்கும் தன்னப்பிக்கையை **“ஆடுகளை மேய்த்து வளர்த்து ஆடுகள் போடும் குட்டிகளோடு அவற்றை மறு வருடம் ஆட்டுக்காரரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அதுவரை ஆடுகள் போடும் புழுக்கை மட்டுமே இவர்களுக்கு சொந்தம்” (கீதாரி.ப-166)** என்பதன் மூலம் இடையர்கள் தங்களின் வாழ்வியல் மாற்றங்களை அமைத்துகொண்டனர்.

இடையர்களின் துன்பத்தை “தீ இந்து” சென்ற (28-06-2017) நாளிதழ்லில் “காடாறு மாசம், வீடாறு மாசம்” என்னும் செய்திகட்டுரையில் நாடோடி வாழ்க்கையை வாழ்ந்த இவர்களின் ஒருவர் கூறுவதன் மூலம் அறியலாம். **“மழைக்காலங்களில் ஆடுகளுக்கு நோவு வந்துச்சுனா மொத்தம் மொத்தமா இறந்துவிடும். அந்த நேரங்களில் எங்கபாடு ரொம்பவே கஷ்டமாகிடும். அதுமாதிரியான நேரங்களில், குடைய புடிச்சுக்கிட்டு ஆடு ஓட்டுற கம்பை ஆதாரமா வைச்சுக்கிட்டு கம்புல ஒத்தைக்காலும் தரையில ஒத்தைக் காலும் வைச்சுக்கிட்டு நின்ன மேனிக்கத்தான் தூங்குவோம்.”** இந்த நிகழ்வு, சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த இடையர்களும் இவ்வாறுதான் நின்றவாறு

தூங்கினர் என்று ஹம்பியில் மற்றும் தாரமங்கலம் கோவிலில் பார்த்த சிற்பங்கள் **(N.GANESAN)** மூலம் அறியமுடிகிறது.

“கிடை”க்கு என்று தனிச்சட்டங்கள் உண்டு என்றும் ஆட்டுக்குட்டிகளின் கூடுகளை முறைப்படுத்தி வைப்பதற்கு வட்டம் என்றும் இடையர்கள் யாரும் சட்டத்தை மீறக்கூடாது கிடைக்காரர் தனிமொழியே உண்டு என்றும் ஆட்டின் நிறத்தை வைத்து தங்களுடை ஆடுகளை பங்கு செய்து கொள்வார்கள் **(கி.ராஜநாராயணன்)** கிடை மூலம் அறிந்துக்கொள்ளமுடிகிறது. அதனை அகநானூறு பாடல் ஒன்றில் ஆட்டிடையர்கள் வயல்களில் கிடை கட்டி, கிடைக்குக் காவலாக அங்கேயே தங்குவது உண்டு. வயலில் கிடைகட்டுவது தொடர்பாக சான்று காணமுடிகிறது. புன்செய் நிலத்தில் எருவிற்காக ஆட்டுக்கிடையை நிறுத்தி இடையர் காவலிருப்பர் என்பதையும் பாம்புகள் நடுங்குமளவு இடியிடிக்கும் நள்ளிரவிலும் இடையர் காவலிருப்பதை அறியமுடிகிறது. கீதாரி நாவலில் இடையர்கள் தெம்மாங்கு பாடுவதன் மூலம் ஆட்டிடையர்கள் மேய்க்கும் போதும் அவற்றைக் காவல் காக்கும் சமயங்களில் கால் வலியை மறக்கவும், தூக்கத்தை தவிர்க்கவும் இப்பாடல் குறிப்பு இடம்பொற்றுள்ளதை அறியலாம்.

**“சந்திர்ரே சூரியரே/ சாதிப்பகவானே**
**இந்திரா நோக்கியல்லோ/ எடுத்தனதே சிறு தெம்மாங்கே”**

**என்று பாட, அதற்கு எதிர்பாட்டாக**

**“பாட்டுக்குப் பாட்டெடுப்பேன்-ஓம்**
**பாட்டனயும் தோக்கடிப்பேன்**
**எதிர் பாட்டு படிக்கலேன்ன**
**ஏணிவச்சி பல்லொடொப்பேன்” (கீதாரி, ப.118)**

இடையர்கள் பகலில் ஆடுகளை மேய்ப்பதும் இரவில் அவற்றைக் கிடையில் அடைத்து விட்டு தூங்காமல் காவல் காப்பதும் ஆண்களின் பணியாகும் கிடைப்போடுவதற்கு நில உரிமையாளர்களின் நோக்கம் அறியும் விதமாக ஆடுகளின் மூலம் கிடைக்கும் மூத்திரம் மற்றும் புழுக்கையோ உரமாக பயன்படுத்தி கிடைப்போடச் செய்வார்கள் அதனால் வயலில் மேய்ச்சல் இருக்கும் வரையில் அல்லது நிலவுடைமையாளர் விரும்பும் வரையில் கிடை இருக்கும். பெரும்பாலும் மேய்ச்சல் தீர்ந்த பிறகு வேறு நிலத்திலோ, ஊரிலோ கிடைப்போடுவது இடையர்களின் வழக்கமாகும். **(கீதாரி,ப.120)** இவற்றின் மூலம் இடையர் இன மக்களின் தீக்கோலையையும் உடம்பில் பல தழும்புகள் பெற்றிருப்பதையும் மற்றும் அவர்கள் மழையில் நனைந்தபடி நின்று இருப்பதையும் இரவு நேரம் காவல் புரிவதை அறிவதோடு அவர்களின் வாழ்க்கைமுறையை அறிந்துக்கொள்ளமுடிகிறது.

**தொழில்கள்**

இடையர் இனத்து மக்கள் மேய்த்தல் தொழிலை பேணிகாத்து அவற்றில் பெறப்படும் பொருள்களை பிற நிலங்களுக்கு சென்று விற்றல், முல்லை நிலம் இடையர்கள் பசுக் கூட்டங்களையும் கன்றுகளையும் காட்டில் மேய்க்கும் வழக்கமும் அவர்கள் பால் விற்கும் பொருட்டு அதற்கு விலையாக உணவுக்குரிய தானியத்தைப் பெற்றுச்செல்லும் (**பால் நொடை இடையன், நற்.142**) வழக்கம் இருந்துள்ளதை காணமுடிகிறது. இடையர்

குலப்பெண்கள் விடியற் காலை பறவைகளின் ஒலிகேட்டு மத்தலில் தயிரைக் கடைதலை மேற்கொள்வார்கள். அப்படி எடுக்கப்பட்ட வெண்ணெய் தனியாகவும் மோர் தனியாகவும் பிரிக்கும் தொழிலை மேற்கொண்டிருந்தனர். நாள்தோறும் புதியதாக உருவாக்கப்பட்ட மோரினைப் பெண்கள் சுமந்து சென்று விற்றதை பெரும்பாணாற்றுப்படை பாடலின் மூலம் அறியலாம்.

**"குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மக**
**அளைவிலை உணவிற் கிளையுட னருந்தி**
**நெய்விலைக் கட்டிப் பசுப்பொன் கொள்ளா"**

**(பெரும்.162-164)**

இப்பாடல் வரியில் ஆயர் மகள் பால் காய்ச்சி அதிலிருந்துக் கிடைக்கும் மோர்,வெண்ணைய், நெய் எடுத்து விற்று வரும் பணத்தை பொன்னாக வாங்காமல் கறவைக் கன்றுகள் வாங்குவதை அறியமுடிகிறது. ஆயர் மகள் மோரினை விலைக்கு விற்கச் செல்பவர்கள் அக்கருத்து சிலப்பதிகாரத்தில் **அளை விலை உணவின் ஆய்ச்சியர். (சிலம்பு.13, 3-4** ) அமைகின்றன. இதனையே

**"மாங்காய் நறுங் காடி கூட்டுவோம், யாங்கும்"**

**(கலித்தொகை.109)**

இப்பாடல் வரியில் ஆயர் மகள் மோர் விற்பதோடு மாங்காய் ஊறுகாயும் விற்பதை காணமுடிகிறது. பால் விற்கப்பட்டதையும் **(நற்.142)**, மலர்கள் விற்கப்பட்டுள்ளதையும் **(நற்.97)**, இடையர்கள் மேய்ச்சலுடன் வேளாண்மையையும் சேர்த்தே செய்தமையை நற்றிணைப் பாடலில் **(நற்,பா.121)** விதையா மற்றும் முதையல் என்ற சொற்கள் மூலம் மேய்ச்சல்காரர்கள் உழவர்களாக இருந்தமையை அறியமுடிகிறது. மேலும் நற்றிணை 266, 289 அகநானூறு 194, 394 ஆகிய பாடல்களில் இடையர்கள் வேளாண்மை செய்தமையை காணமுடிகிறது.

அதனை தொடர்ந்து இடையர்கள் பசு நிரைகளை மிகுதியாக கொண்டிருப்பதால் அவர்கள் வரகுகதிர்களை மாடுகளைக் கொண்டு போரடித்து பிறகு அதனை மகளிர் பாறைகளில் குவித்து வரகு அரிசியாகிப் புடைத்து, பின் சுனைநீரைக் கொண்டு சோறாக்கி வழிச்செல்லும் வழிப்போக்கருக்கு வழங்குவர். **(அகம் பா.393)** மேலும், சிறுதானியப் பயிற்களையே களையெடுத்தல் பற்றியும் மற்றும் தானியக் கதிர்களை எருமைகள் கொண்டு போரடித்தல் பற்றி **(சி.கணேசையர்)** குறிப்பிடுவதை காணமுடிகிறது. இன்றைய புதினத்தில் வேளாண்மைத்தொழில் மற்றும் ஆடுமாடுகள் வளர்ப்பதும் சிறு சிறுதாகக் குறைந்து வருவதை **(சு.தமிழ்ச்செல்வி)** புதினங்களில் அறிவதோடு கடினமான இவ்வகை தொழிலிருந்து விடுபட மக்கள் முனைவதை இப்புதினங்களின் வழி அறிந்துக்கொள்ளமுடிகிறது. மேலும் வேளாண்மை மேற்கொள்ள அதிக ஏந்திரங்கள் வந்தாலும் பெரும்பாலும் மாடுகளை அறுப்புக்காக ஏற்றுமதி செய்வதையும் மாடுகளை திருடி சந்தைக்கு விற்பதையும் கீதாரி புதினத்தில் பதிவாகியுள்ளதை **(ப. இந்திரா)** அறிவதோடு, இடையர் இன மக்கள் சங்க இலக்கியத்தில் மேய்ச்சல் மட்டுமின்றி வேளாண்மையிலும் திறன்பட செய்திருப்பதையும் இடையர் குலப்பெண்களின் தொழிலையும் காண்பதோடு, சமகால இலக்கியங்களின் வழி பார்க்கும் போது இடையர் மக்கள் வாழ்க்கை மாற்றத்தை நம்மால் அறிந்துக்கொள்ளமுடிகிறது.

**திருமணம்**

திருமணம் என்பது " மனிதல மனம் தன்பால் உந்துதலை ஒரு நிறுவன அமைப்பிற்குள் நிறைவு செய்து கொள்ள ஏற்படுத்திய முறையே திருமணமாகும்" **(பக்தவத்சலம்)** என்றும், "இரத்த உறவின் அடிப்படையில் ஏற்பட்ட ஒரு தலைமுறையினரின் சிறிய சமூதாய நிறுவனமே குடும்பம் ஆகும் என்று சம்னர், கெல்லர் ஆகியோர் கூறுகின்றனர்". **(சா. சாவித்ரி)** இனக்குழு வாழ்வு தொடங்கி தாய்வழி சமூகம், தந்தை வழி சமூகமாக நிலைப்பெற்ற பின்னர் பல வகையில் குடும்பச் சூழல்களுக்கும் திருமணமுறைகள் மாறுப்பட்டு வந்திருப்பதை இடையர்களிடம் காணலாம். கலித்தொகையில் தன்நிலம் சார்ந்த பழக்க வழக்கம் உடைய மணமகனை ஒரு சடங்கின் மூலம் அடையாளம் காண்பதையும் ஏறுதழுவுதல் ஏதோ ஒரு வீரவிளையாட்டுபோலத் தோன்றினாலும் அது புறமண உறவைத் தடைசெய்யும் வகையில் அமைந்துள்ளன என்றும் அதே வேளையில் தகுதி காண் திருமணம் (Probationary Marriage) என்னும் திருமணமுறை இவர்களிடம் காணப்படுகின்றது.(**கோ.சதீஸ்**)

**"ஆயர்மகனாயின், ஆய்மகள்நீயாயின்**
**நின்வெய்ய னாயின், அவன் வெய்யை நீ ஆயின்**
**அன்னை நோதக்கதோ இல்லைமன் நின் நெஞ்சம்**
**அன்னை நெஞ்சாகப் பெறின்"**

**(கலி.107)**

ஆயர்மகன் ஆயர்மகளை விரும்புகிற நிலையிலும், ஆயர்மகள் ஆயர்மகனை விரும்புகின்ற நிலையிலும் அன்னை நொந்து வருத்தப்படுவதற்கு இடமின்றி அமைவதை கலித்தொகையில் காணமுடிகிறது. அயர்மகள் இடையர்கள் செயல்பாடுகளையும் திறமையும் அறிந்துக்கொள்பவர்களாக இருந்தமையை முல்லைக்கலியில் அறியலாம்.

**"ஆயர் எமரானால் ஆய்த்தியேம் யாம் மிகக்**
**காயாம்பூங் கண்ணிக் கருந்துவர் ஆடையை**
**மேயும்நிரை முன்னர்க் கோல் ஊன்றி நின்றாய் ஓர்**
**ஆயனை அல்லை பிறவோ"**

**(முல்லைக்கலி.108)**

இப்பாடல் வரியில் எங்களவர்கள் ஆயர், நாங்கள் ஆய்த்தியர், இது எங்கள் மரபு, காயாம்பூ கண்ணியும் கருந்துவர் ஆடையும் உடையவனாக மேய்ந்து கொண்டிருக்கும் ஆநிரை முன்னர் கோலூன்றி நிற்கின்றாயே நீயோர் ஆயனன்றி வேறு யாரோ என்று உரைப்பதின் மூலம் இடையர்கள் உள்ளும் சமூகப் படி நிலைகள் இருந்துள்ளதை பகை அஞ்சாத புல்லினத்து ஆயர் (ஆட்டிடையர்) மகனை நீ ஆயின் குடம் சுட்டும் நல்லினத்து ஆயர் எமர் **(கலி.113)** என்னும் பாடலில் ஆடு மேய்ப்பவர்களுக்கும் மாடு மேய்ப்பவர்களுக்கும் இடையிலான வர்க்க வேறுபாட்டைக் காணமுடிகிறது.

முல்லைத் திணையில் காணப்படும் திருமணம், குடும்ப சூழ்நிலைகளை விரிவாக ஆராயவேண்டியுள்ளது. திருமணத்தின் போது இல்லத்தை அழகுபடுத்துவதையும்

புதுமணல் பரப்பி செம்மண்ணால் பூசியுள்ளதை கலித்தொகையில் காணமுடிகிறது. (**கலித்தொகை பா.114**) முல்லைப் பகுதியில் நடக்கும் திருமண அமைப்பினை அகநானூற்றுப் பாடலில் காணலாம். (**அகநானூறு பா.394**) திருமண நாள் அன்று செம்மறி ஆட்டின் பாலில் விளைந்த தயிர், வரகு அரிசி, ஈசல் ஆகியவற்றைச் சமைத்து இனிய புளிப்பையுடைய சூடான சோற்றை பசுவெண்ணெய் மேல் ஊற்றி உருக உண்டனர். மணமகன் உண்பதற்குப் பால்சோற்றை மணமகள் தொட்டு கொடுப்பது வழக்கம். புதிய உண்கலம் கொண்டு வருதல் மூலம் மணமகன் வீட்டில் சமைக்கும் உரிமை பெறுகிறாள். திருமணச் சடங்கின் மூலம் வீட்டுப் பொறுப்பு ஏற்றுக்கொண்ட அறிகுறியாக மணமகனுக்கு உணவு சமைத்துத் தருவதையும் அகநானூற்றில் காணமுடிகிறது.

சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் திருமண வாழ்க்கை முறையானது களவு, கற்பு என இரண்டு வகையாக சிறப்பிக்கப்படுகிறது. முல்லை நிலத்தில்தான் களவு விட வீரதிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கலித்தொகையில் முல்லைக்கலியில் வீரத்தின் விளை நிலம் என்று ஆயர்குலத்தின் வாழ்வையும் பழக்கவழக்கத்தையும் விவரிக்கிறது. **(அ.தீபக்) "ஆட்டிடையர்களின் திருமண முறையை நோக்குகின்ற பொழுது சித்தப்பா முறையில் திருமணம் செய்துக்கொள்ளுதையும் அண்ணன் இறந்தால் அண்ணனின் மனைவியைத் தம்பி திருமணம் செய்துக்கொள்வதையும் மற்றும் இடையர்களுக்குத் திருமண நாளன்று வரமுடியாத சூழல் ஏற்படும் பொழுது மாப்பிள்ளைக்கு பதிலாக ஆடு மேய்க்கும் தடிக்கம்பை வைத்து திருமணம் செய்கின்றன. திருமணத்திற்கு சீதனமாக ஆடுகள், புலங்கு பொருள்கள் மற்றும் மளிகை சாமான்களை வழங்குவதை கீதாரி நாவலில் காணமுடிகிறது". (கீதாரி.ப-98, 100, 101, 131, 96)** இடையர்களின் திருமணம் முறையானது இனக்குழுவுடன் ஏற்படக்கூடியதாகவும் அவர்களின் திருமணம் வீரவிளையாட்டை பொருத்த வீரச்செயலாகவும் திருமணத்தின் போது இல்லத்தை சுத்தபடுத்துவதையும் திருமணம் நடக்கும் போது உணவு வழங்குவதும் காணமுடிகிறது. காலச்சூழலுக்கேற்ப இடையர் இன மக்களின் திருமண முறையானது எவ்வாறு மாற்றமடைந்து வந்திருப்பதனை நம்மால் தெளிவுப்பட அறிந்துக்கொள்ளமுடிகிறது.

**முடிவுரை**

இடையர் குறித்த பெயர்கள் கால மாற்றத்திற்கு ஏற்றவாறு மாற்றமடைவதை காணமுடிகிறது. கால்நடைக் கூட்டங்களை தங்கவைக்கும் இடையர்கள் தனித்துவத்தோடு திகழும் வாழ்வியலைக் கிடைப்போடுவதன் மூலம் வாழத் தொடங்குவதும், தங்களது பொருளாதாரத் தேவையை பூர்த்தி செய்து ஆடுமாடுகளை மேய்க்கும் இடையர் மக்கள் தனிப்பட்ட பண்பாட்டைக் கொண்ட சமூகமாகவும் காணப்படுகின்றனர். இடையர் இனக்குழுவினர் காலப்போக்கில் பல பரிணாம வளர்ச்சி அடைந்து பல்வேறு புதிய அடையாளங்களைக் கொண்டிருக்கின்றனர் என்பது புலனாகிறது. இடையர்கள் தங்களுக்கென்று இருப்பிடம் இருந்தாலும் அவர்கள் வாழ்க்கை சூழ்நிலைக்காகவும், உறவுகளுக்காகவும், தொழிலுக்காகவும் நாடோடியாக புலம்பெயர்ந்துச் சென்றுள்ளதை அறியமுடிகிறது. இடையர்களின் உணவுமுறையானது அவர்களின் சூழலுக்கேற்றவாறு மற்றமடையாமல் இருந்தமையையும் காணமுடிகிறது. இடையர் இன மக்களின் தீக்கோலையையும் உடம்பில் பல தழும்புகள் பெற்றிருப்பதையும் மற்றும் அவர்கள் மழையில் நனைந்தபடி நின்று இருப்பதையும் இரவு நேரம் காவல் புரிவதை அறிவதோடு

அவர்களின் வாழ்க்கைமுறையை அறிந்துகொள்ளமுடிகிறது. கீதாரி நாவலின் வழி பார்க்கும் போது இடையர் மக்கள் வாழ்க்கை மாற்றத்தை நம்மால் அறிந்துகொள்ளமுடிகிறது.

**பார்வை நூல்கள்**


1. சு. தமிழ்ச்செல்வி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (pvt) ltd, சென்னை 2008,
2. பீ.பெரியசாமி, சங்க இலக்கியத்தில் ஆயர்கள், தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் 2020.
3. கி.ரா.வின் "கிடை" இடையர்களின் வாழ்வியல், தமிழாய்வுத்துறை தூயவளனார் கல்லூரி (தன்னாட்சி) திருச்சிராப்பள்ளி, 2023.
4. செல்வராசு அ, சங்க இலக்கியத்தில் குடிமக்களும் தலைமக்களும், பக். 3-4
5. பா. ஈஸ்வரன் "கீராரி" நாவலில் இடையர்களின் நிலை, 2021
6. டாக்டர் அ. முத்துசாமி, சங்க இலக்கியத்தில் ஆயர், புத்தகம், தமிழிணையம் மின்னுலகம்.
7. க.கவிதா, புதிய அவையம், சங்க இலக்கிய முல்லைத்திணை மக்களின் மானுடவியல் பண்புகள்,2023 .
8. வில்லிபுரம் மகேஸ்வரன், சோழர் காலத்துக் கோயிலும் சமூகமும் ப.141-142.
9. N.GANESAN, Re(Min Tamil) இடையர் சிற்பங்கள்.
10. கி.ராஜ நாராயணன், கிடை நாவல், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ், நாகர்கோவில், பதிப்பு 2022.
11. பெ. கபிலர், 2022, வரத்தாட்டுக் கீதாரிகளின் இனவரைவியல் ஓர் அறிமுகம்.
12. முனைவர் ந. மணிகண்டன், கீதாரி நாவல் வெளிப்படுத்தும் இடையர்களின் வாழ்வியலும் பண்பாட்டு மரபுகளும், புதிய அவையம், பதிப்பு 2023.
13. ப. இந்திரா, சு. தமிழ்ச்செல்வி புதினங்களில் தொழில்கள், உங்கள் நூலகம், பதிப்பு நவம்பர் 2022.
14. அ. தீபக், கலித்தொகை சுட்டும் ஏறுதழுவல், Iandian Journal Of Tamil, பதிப்பு 2024.
15. கா. சதீஸ், 2016, சங்க கால திணைக்குடில்கள், உங்கள் நூலகம்.
16. திவாகரம் (முதல் தொகுதி), பதிப்பபாசிரியர் மு.சண்முகப்பிள்ளை இ.சுந்தரமூர்த்தி, முதல் பதிப்பு 1990, இயக்குனர்,பதிப்பகம், சென்னைப் பல்களைக்கழகம், சென்னை 600 005
17. பக்தவத்சலம், பண்பாட்டு மானுடவியல், பக்-379.
18. சா.சாவித்ரி, சமூகவியல்,மோகன் பதிப்பகம், சென்னை, மு.ப 1987.
19. நாகராசன்.வி, அகநானூறு, நியூசெஞ்சுரி புத்தக நிலையம், சென்னை, 2004
20. தமிழிணையம், நற்றிணை, நியூசெஞ்சுரி பிரிண்டர்ஸ் சென்னை-606098
21. சி.கணேசையர் (பதிப்) தொல்காப்பியம் - பொருளதிகாரம், நச்சினார்க்கினியம், திருமகள் அழுத்தகம் சுண்ணாகம் 1948, ப.59

22. தமிழிணையம், சிலப்பதிகாரம், பா.13. 3-4.
23. நச்சினார்க்கினியர் (உரை), கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை. பதி. 1978
24. சாமிநாதையர், உ.வே. 1918, பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், கமர்ஷியல் அச்சுக்கூடம் சென்னை.
25. சாமிநாதையர் உ.வே.,1935 (3ஆம்பதிப்பு), புறநானூறு, சென்னை, லாஜர்னல்அச்சுக்கூடம்.
26. சாமிநாதையர், உ.வே.,1947, குறுந்தொகை மூலமும் உரையும், சென்னை, மூன்றாம் பதிப்பு கபீர் அச்சுக்கூடம்
27. சுப்பிரமணியஐயர் ஏ.வி, தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் 2008.
28. சுப்பிரமணியன் க, சங்ககாலச் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 1993.
29. பக்தவத்சலபாரதி, பண்பாட்டியல் நோக்கில் பண்டைத் தமிழர் சமய மரபுகள், புதுச்சேரிமொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்2011.
30. மறைமலையடிகள், முல்லைப்பாட்டு ஆராய்ச்சி, டி.எம். அச்சுக்கூடம், பல்லாவாரம்,1919(3 பதி) .
31. மாணிக்கம்,வ.சுப, தமிழ்க்காதல், மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம், 2002.
32. மாதையன் பெ, 2004, சங்க இலக்கியத்தில் வேளாண் சமூகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை 2004.
33. மாதையன் பெ, சங்ககால இனக்குழு சமூகமும் அரசு உருவாக்கமும், பாவை பப்ளிகேஷன், சென்னை , 2004.
34. வேங்கடசாமிநாட்டார் ந.மு., கவியரசுரா. வேங்கடாசலம் பிள்ளை 1943 அகநானூறுகளிற்றியானைநிரை,